Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 01 செவ்வாய்க்கிழமை(17-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:257

## சிஹல உறுமய கட்சியில் பிளவு! குணசேகரா பதவி துறந்தார்!!

### தேசியப் பட்டியலுக்கு பௌத்தரான கருணரத்தின

கொழும்பு,ஒக்.17

சிங்கள மக்களின் பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 'சிஹல உறுமய' கட்சி இரண்டாகப் பிளவுபட்டு விட்டது.

இந்தக் கட்சியை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்த சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகரவும் கட்சியின் மத்திய குழுவைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும் கட்சியிலிருந்து இராஜிநாமாச் செய்து விட்டனர்.

கட்சியின் தலைவரான எஸ்.எல்.குணசேகர கிறிஸ்தவர் என்பதால் சிங்கள பாரம்பரியத்தை அவரால் பாதுகாக்க முடியாது என்று எழுப்பப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் எஸ்.எல். குணசேகரா இத்தகவலை வெளியிட்டார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பேரியல் அஷ்ரப்புடன் ஜனாதிபதி நேற்று ஒரு மணி நேரம் பேச்சு!

### அரசு அமைப்பதில் உள்ள இடையூறுகள் குறித்து ஆராய்வு



கொழும்பு,ஒக்.17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசமைப்பதற்கு தேசிய ஐக்கிய முன்னணியின் ஆதரவைப் பெறுவதிலுள்ள தடைகள் குறித்து அந்த முன்னணியின் தலைவியான பேரியல் அஷ்ரப்புடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை ஒரு மணி நேரம் கலந்துரையாடினார்.

அமைச்சர் அஷ்ரப் மரணமானதை அடுத்து வீட்டிலேயே இருந்து "இத்தா" தொழுகை மேற் கொண்டுள்ள பேரியல் அஷ்ரப்பை அவரது வீட்டுக்குச் சென்று கலந்துரையாடிய ஜனாதிபதி சந்திரிகா பல உறுதி மொழிகளை வழங்கியுள்ளார் என அறியவந்தது.



இரு அமைச்சர் பதவிகளையும் மூன்று பிரதி அமைச்சர் பதவிகளையும் வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாகவும் -

பேரியல் அஷ்ரப்புக்கும் ரவூப் ஹக்கீமுக்கும் அந்த அமைச்சுகளை வழங்க இணக்கம் காணப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பேரியல் அஷ்ரப் அவரது கணவன் இறந்த நாளில் இருந்து 120 நாள்களுக்கு வெளியில் செல்ல இஸ்லாமிய மதம் இடம்கொடாத காரணத்தால் -

(10ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர்களுக்கு பொறுப்புகளை ஒதுக்குவதில் இறுதி முடிவில்லை

## கிரனேட் தாக்குதல்

மட்டக்களப்பு,ஒக்.17

ஏறாவூர் - வம்மியடி பொலீஸ் சோதனைச் சாவடி மீது நேற்றிரவு 7.30 மணியளவில் விடுதலைப் புலிகள் கிரனேட் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் அரை மணி நேரம் இரு தரப்பும் மாறிமாறி துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர் என மட்டக்களப்பு செய்திகள் தெரிவித்தன.

(இ-1-2)

## மூத்த உறுப்பினர்களுடன் ஜனாதிபதி நள்ளிரவு வரை மந்திராலோசனை

கொழும்பு, ஒக்ரோபர்17

**புதிய அமைச்சரவைக்கு யார் யாரை நியமிப்பது, அவர்களுக்கு எந்தெந்த அமைச்சுப் பொறுப்புகளை ஒதுக்குவது என்பன குறித்து இறுதி முடிவு எடுக்க முடியாத நிலையில் -**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், முந்திய அரசின் மூத்த உறுப்பினர்களும் நேற்று மந்திராலோசனை நடத்தினர்.**

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அமைச்சர்கள் பட்டியலுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்படவில்லை என்று முன்னாள் மூத்த அமைச்சர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை உறுப்பினர்களின் பட்டியலைத் தயாரிப்பதற்கான ஆலோசனை அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நேற்று முற்பகல் தொடங்கியது.

எனினும் இடைவெளி விட்டு விட்டு கலந்துரையாடல் நள்ளிரவு வரை தொடர்ந்தது. அவ்வாறிருந்த போதிலும் அமைச்சர்கள் நியமனம் உறுதியாக்கப்படவில்லை என்று அறியவந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மைக் கட்சிகளில் தங்கியிராது 2 பிரதான கட்சிகளும் இணைய வேண்டும்

### முத்தெட்டுவே ஆனந்ததேரர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.17

அரசமைப்பதற்குச் சிறுபான்மைக் கட்சிகளில் தங்கியிராது, பிரதான கட்சிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளார் தாதிகள் சங்கத் தலைவரான முத்தெட்டுவே ஆனந்ததேரர்

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

சிங்கள மக்களின் இரு பெரும் கட்சிகள் இருந்த போதும் அவை ஆட்சியமைக்க சிறு சிறு குழுவாக உள்ள சிறுபான்மைக்கட்சிகளின் உதவியை நாடுகின்றன. இந்த நிலையை மாற்ற இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைக்க பௌத்த பிக்குகளும் வர்த்தகர் சமூகமும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதனால் பேரம் பேசும் அந்தக் கட்சிகளின் முகமூடிகளைக் கிழிக்க முடியும்.விகிதாசாரமற்ற அமைச்சரவை உருவாவதை தடுத்து நிறுத்த முடியும்- என்றார்.(இ-3-7)

## 3 கட்சிகள் தேசிய பட்டியலை வெளியிட்டன

தேசிய பட்டியல் மூலம் உறுப்பினர்களை நியமிக்கும் பட்டியல்களை நேற்று மூன்று கட்சிகள் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியிருந்தன.

தேசிய ஐக்கிய முன்னணி பஷீர் சேகுதாவூத்தையும் -

ஜே.வி.பி.அமைப்பினர் அஞ்சா உம்மா, அநுர திஸாநாயக்க ஆகியோரையும் -

"சிஹல உறுமய" அமைப்பு திலக் கருணாரத்தினவையும் - தமது உறுபினர்களாக நியமித்துள்ளன.

பிரதான கட்சிகள் இரண்டும் நேற்று இரவுவரை தமது பட்டியலைச் சமர்ப்பிக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## ஐ.தே.கவின் தேசியப் பட்டியலில் 3 தமிழர்கள் 2 முஸ்லிம்கள்

### நேற்று பெயர் விவரங்கள் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.17

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் மூன்று தமிழர்களும் இரு முஸ்லிம்களும் இடம் பெற்றுள்ளனர்.

அந்தக் கட்சியின் உயர் பீடம் நேற்று மாலை கூடி தேசியப் பட்டியலில் இடமளிக்கப்படவிருப்பவர்கள் குறித்து இறுதி முடிவு செய்தது.

இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

கே.என்.சொக்ஸி, ஏ.எச்.எம். அஸ்வர், மிலிந்த மொரகொட, தஹம் விமலசேன, கணபதி கனகராஜ், அப்துல் மஜீத், எம். எஸ். செல்லச்சாமி, பி.பி.தேவராஜ், ரவீந்திர ரந்தெனிய, திலக் மாரப்பன, நிஹார் பக்மீவெவ, ஸ்ரீநாத் டி மெல்.

நியமனம் பெற்றுள்ள மூன்று தமிழர்களும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-8)

## பொ.ஐ.முவின் தேசியப் பட்டியல் வெளியிடப்படுவதில் தாமதம்

### ஹிஸ்புல்லாவுக்கு இடமளிக்க வற்புறுத்து

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம் பெறுபவர்களின் விவரம் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படும் அதே சமயம்-

இப்பட்டியலில் வடக்கு -கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாளுக்கு இடமளிக்கப்படவில்லை என்று செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தேசியப்பட்டியலில் யார் யாரை இடம்பெறச் செய்யவேண்டும் என்பது தொடர்பாக நேற்றிரவு வரை ஜனாதிபதி சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஆராய்ந்து கொண்டிருந்தார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் உப - தலைவரான எம்.எல்.எம். ஹிஸ்புல்லாவை தேசியப்பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று அந்த முன்னணி வற்புறுத்தி வருகிறது.

இதற்கு ஏனைய கட்சிகள் இணக்கம் தெரிவிக்காததால் இந்தப் பட்டியல் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பட்டியலில் லஷ்மன் கதிர்காமர், அலவி மௌலானா, றொனி டி மெல், விஜயபால மெண்டிஸ் ஆகியோருக்கு இடமளிக்கப்படவிருப்பதாகத் தெரியவந்தது. (இ-3)

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அரசு தொடர்ந்து ஆதரவு வழங்கும்

### நோர்வேப் பத்திரிகைக்கு கதிர்காமர் பேட்டி

ஒஸ்லோ,ஒக்.17

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சமாதான முயற்சியை மீண்டும் தொடர்வதென்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது.

வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என "நோர்வே போஸ்ட்" என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அனுசரணையாளராக நோர்வே செயற்படுவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்குள் பாரதூரமான கருத்த முரண்பாடுகள் எதுவும் இல்லை என்றும் கதிர்காமர் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சூடான தேர்தல் பிரசார வேளையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்து, முஸ்லிம் மத விவகாரங்களுக்கு 2 பிரதி அமைச்சர்கள் நியமனமாவர்

கொழும்பு,ஒக்.17

இந்து, முஸ்லிம் சமய கலாசாரத்துக்காக இரு பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்து சமய விவகார பிரதி அமைச்சராக திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து தெரிவான ஈ.பி.டி.பி. உறுப்பினர் குணசேகரன் சங்கரனும்

முஸ்லிம் சமய விவகார பிரதி அமைச்சராக வவுனியா மாவட்டத்திலிருந்து தெரிவான தேசிய ஐக்கிய முன்னணி உறுப்பினர் நூர்தீன் மசூரும் நியமிக்கப்பட உள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## சிவக்கொழுந்து இராசரத்தினம்

அம்மாவிடம்
16-09-1930
(நவமி திருவாதிரை)

ஆண்டவனிடம்
27-09-2000
(அமாவாசை உத்தரம்)

அப்பா!,
அன்பெனும் அமுதூட்டி
ஆதரவாய் வழிகாட்டி
நம்பிக்கை ஒளியூட்டி
நம்மையெல்லாம் காத்திருந்தீர்கள்
சதி செய்த காலம்
உங்களைப் பறித்துப் போனது!
துயரில் துவண்டு நிற்கின்றோம்
நனைந்த விழிகளுடன்
என்றும் உங்கள் நினைவுடன்.

எமது அன்புத் தந்தையார் நோயுற்றிருந்தவேளை அவரைச் சிரத்தையுடன் கவனித்த யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவு வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் அனைவருக்கும், அன்புத்தந்தையின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்தும் கடிதமூலமும் ஆறுதல் தந்த அன்புள்ளங்களுக்கும், பத்திரிகை வாயிலாகவும் பிரசுரங்கள் மூலமும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியும் மலர்வளையங்கள் வைத்தும் அஞ்சலித்த யா/செங்குந்த இந்துக் கல்லூரி, யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலைச் சமூகங்களுக்கும், நினைவுமலர் வெளியீட்டுக்கு ஆக்கங்கள் தந்தும் அச்சடித்தும் உதவியோர்க்கும் உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (17.10.2000) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்
தாய்மாமன் கார்த்திகேசு,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், சகலன்மார்.

882.பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C 13424)

# இதய அஞ்சலி

யாழ்.மத்திய கல்லூரி ஆளணியைச் சேர்ந்த
**து.தேசியநாதன்**
அவர்களின் பாசமிகு சகோதரன்

## துரைசிங்கம் முருகசேகரம்

அவர்கள் கொலன்டில் 09.10.2000 அன்று காலமானார். அமரரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(79559) நலன்புரிச் சங்கம், யாழ்.மத்திய கல்லூரி.

# கண்ணீர் அஞ்சலி

றோமன் கத்தோலிக்க நெறி பயிற்சி ஆசிரியை
**செல்வி பரமநாதன் மைந்தினி**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி யோகம்மா பரமநாதன்

அவர்களின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த துயருற்றிருப்பதோடு பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள்,
(79558) பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் மாதவர் கனகராஜநாயகம்

அவர்களது மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியுறும் நாம், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன
(C/13421) ஆளுநர் சபையும், உத்தியோகத்தர்களும்.

விவசாயபீடம்
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

விவசாய பீடத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி 23.10.2000 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி பீடத்தில் ஆரம்பமாகும். விவசாய பீடத்திற்கு பதிவுகளை மேற்கொண்ட அனைத்து மாணவர்களும் இந் நிகழ்ச்சியில் பங்குபற்று வதற்காக காலை 8 மணிக்கு விவசாய பீடத்திற்கு சமுக மளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து புதிய மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு விரிவுரைகள் ஆரம்பமாகும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம். (C/13418)


**ராஜா (யாழ்ப்பாணம்)**
விஜய், ஜோதிகா,
விஜயகுமார் மற்றும்
பலரின் நடிப்பில்
**குஷி**
காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.) (C/13401)

**நாகம்ஸ் சுன்னாகம்**
பிரசாந்த், ரம்பா,
லிவிங்ஸ்டன்,
ராதாரவி நடித்த
**பூமகள் ஊர்வலம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.) (79554)


# துர்க்காபுரம் மகளிர் இல்லம்
## தெல்லிப்பழை

**புதிய மாணவிகளைச் சேர்த்தல் 2001ஆம் ஆண்டு**

மேற்படி இல்லத்தில் 01.01.2001ஆம் திகதி தொடக்கம் புதிய மாணவிகள் பத்துப் பேருக்கு இடமுண்டு. இவர்கள் பெண்பிள்ளைகளாகவும், பெற்றோரை இழந்தவர்களாகவும், வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களாகவும் இருக்க வேண்டும். 01.01.2001 ஆம் நாளில் ஐந்து வயது பூர்த்தியடைந்தவராகவும் பத்து வயதுக்குக் கீழ் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பம் 15.11.2000இற்கு முன்பு அனுப்பி வைக்கவும். நோயாளராகவும், மூளை சுகமில்லாதவராகவும் இருக்கின்ற பிள்ளைகள் விலக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிர்வாகசபை
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

15.10.2000 (C/13419)

# நன்றி கூறுகின்றேன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வெற்றிபெற்ற பருத்தித்துறைத் தொகுதியில் கூடுதலான விருப்பு வாக்கை



எனக்களித்த பருத்தித்துறை வாக்காளர்களுக்கும், யாழ்.மாவட்டத்தில் எமது கட்சியில் 3 ஆவது இடத்தைப் பெறுவதற்கு விருப்பு வாக்கை அளித்து ஆதரவு நல்கிய யாழ்.குடாநாட்டு வாக்காளர்களுக்கும், பிரசாரத்துக்கு உதவிய அன்பர்களுக்கும், காங்கிரஸ் ஆதரவாளர்கள் சகலருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

## திரு.அ.ம.செபஸ்ரியன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். (C/13417)

# கண்ணீர் அஞ்சலி

எமது செயலக உத்தியோகத்தர்
**செல்வி மைதினி பரமநாதன்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி யோகம்மா பரமநாதன்

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலிகாமம் தெற்கு,
உடுவில்.*

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.
(79553)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
# புதிய வகுப்புகளுக்கான அனுமதி - 2001

* **வகுப்பு - 1**
விண்ணப்ப முடிவு திகதி: 2000.10.31
நேர்முகத் தேர்வுத்திகதி: 2000.11.11, 12

பல பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வருடம் முதல் முதலாம் வகுப்பில் பெண் பிள்ளைகளும் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

* **வகுப்பு - 6**
விண்ணப்ப முடிவு திகதி: 2000.10.31
நேர்முகத் தேர்வுத்திகதி: 2000.11.04, 05

புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். உயர் புள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* **ஏனைய வகுப்புகள்**
விண்ணப்ப முடிவு திகதி: 2000.10.31
நேர்முகத் தேர்வுத்திகதி: தனித்தனியே அறிவிக்கப்படும்

நிரந்தரமாக வெளிமாவட்டங்களுக்குச் சென்ற மாணவரதும், வறுமை காரணத்தால் நீக்கப்பட்ட மாணவரதும் குறிப்பிட்ட சில இடங்கள் மட்டும் வெற்றிடத்திற்கு ஏற்ப அனுமதி வழங்கப்படும்.

★ கல்லூரியில் அலுவலக நேரத்தில் பெறப்படும் விண்ணப்பப்படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
★ குறிப்பிட்ட திகதிகளின் பின் எவ்வித விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
★ திறமை அடிப்படையிலேயே முழு அனுமதிகளும் வழங்கப்படும்.

க.இராசதுரை
அதிபர்.

(C/13428)

# மடுப்பகுதி பாடசாலைகளில் ஆசிரியருக்கு பற்றாக்குறை

வவுனியா,ஒக்.17

மன்னார், மடு கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்வி வலயத்துக்கு 439 ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர் என்றும் ஆனால் தற்போது 187 ஆசிரியர்களே கடமையில உள்ளனர் என்றும் மடுக்கல்வி வலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இந்தக் கல்விவலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் 62 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்திலேயே ஆசிரியர் எண்ணிக்கை காணப்படுகின்றது.

ஆனால் தற்போதைய கல்வித்திட்ட நடைமுறைகளின் பிரகாரம்25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் நியமிக்கப்படவேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் கல்வி வலயப்பாடசாலைகளில இருந்து பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாமல் இடையில் நிறுத்திவிட்டு விலகிவருவதாகவும் இதனைத் தடுப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமாறும வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த கல்விவலயத்தில் நியமனம் வழங்கப்படும் தமிழ்மொழி ஆசிரியர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் முஸ்லிம்கள். அதேசமயம் சிங்களப் பாடசாலைகளிலும் தேவைக்கு அதிகமான அளவில் ஆசிரி ய நியமனங்கள் இடம்பெற்றுள் ்ளன. ஆனால் தமிழ்ப் பாடசாலைகளில் மட்டும் ஆசிரியர் நியமனங்களில் புறக்கணிப்பு இடம் பெறுவதாகவும் இதனால் தமிழ் மாணவ சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

## கண்டி மாவட்டத்தில்
# 43 தமிழர்கள் போட்டியிட்ட போதிலும் ஒருவராவது தெரிவு செய்யப்படவில்லை

கொழும்பு,ஒக்.17

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் 43 தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்ட போதிலும் இவர்களில் ஒருவர் கூட நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை.

இந்த மாவட்டத்தில் போட்டியிட்ட மூன்று முஸ்லிம் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.தே.க.சார்பில் போட்டியிட்ட ஏ. எல்.அப்துல்காதர், எல்.எம்.எல். கலீல் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட ரவூத் ஹக்கிம் ஆகிய மூன்று முஸ்லிம்களுமே கண்டி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

65 ஆயிரம் தமிழ் வாக்காளர்களைக் கொண்ட இந்த மாவட்டத்தில் 13 தேர்தல் தொகுதிகள் அடங்கியுள்ளன.

இங்கு போட்டியிட்ட 43 தமிழர்களில் மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.ராஜரட்ணம் 18 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற போதும் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. (இ-5)

### அன்பளிப்பு

நெல்லியடி,ஒக்.17

உலகசேவை தினத்தை முன்னிட்டு, வடமராட்சி லயன்ஸ் கழகம், வதிரி பரமானந்த ஆச்சிரமத்திலுள்ள சிறுவர் மற்றும் முதியோர்களுக்கு உடுபுடைவைகளையும், பாடசாலை உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளது.(இ-109)

### இலச்சினை வரையும் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.17

சைவ நற்பணி மன்றம் நடத்தும் இலச்சினை வரையும் போட்டிக்கான இலட்சினைகளை வரைந்து எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பதாக நாவலர் ஆச்சிரமத்துக்கு அனுப்பி வைக்குமாறு சைவ நற்பணி மன்ற செயலாளர் கேட்டுள்ளார். (இ-ரி)

### 2 சிறுவர்கள் விபத்தில் பலி

கொழும்பு,ஒக்.17

ஜாஎல-துடல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்-மினிபஸ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் தந்தையாருடன பயணம்செய்த இரண்டு சிறுவர்கள உயிரிழந்தனர். தந்தை பலத்த காயமடைந்த நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-7)

### கொடுப்பனவு

ஊர்காவற்றுறை,ஒக்.17

தென்மராட்சிப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஜே-45,ஜே-54,ஜே-55,ஜே-59,ஜே-60 ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவில் வசிக்கும் 28 குடும்பங்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்குரிய தொகை ஊர்காவற்றுறை மக்கள்வங்கிகிளைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும்-

உரியவர்கள் தமது பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பெயர்களை உறுதிப்படுத்திய பின்னர் ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளையிலிருந்து தமக்குரிய கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர ஜே. எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்தார். (இ-ரி)

### சத்யசாயி பயிற்சி நிலையம்

கொழும்புத்துறை,ஒக்.17

யாழ்.சத்யசாயி மனிதமேம்பாட்டு கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் ஆரம்ப விழாவும், பயிற்சி நெறி ஆரம்பமும் யாழ்.ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக பயிற்சி நிலையத்தின் செயலாளர் கே.வி.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

அங்குரார்ப்பண உரையை வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின் இணைப்புக குழுத்தலைவா வி.சேனாதிராசாவும், மதிப்புரையை யாழ்.மேலதிக மகாணக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளையும், அறிமுகவுரையை பயிற்சிநிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரமும் நிகழ்த்தினார்கள்.(இ-30)

### மின் விநியோகம் இன்னும் இல்லை

கொழும்புத்துறை,ஒக்.17

சில்லாலை, அளவெட்டி, பிரான்பற்று ஆகிய பகுதிகளுக்கு நீண்டகாலமாக மின்சாரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள போதிலும் மின்கம்பிகள் இணைக்கப்படவில்லை.

மின்சார விநியோகத்துக்கான உதிரிப்பாகங்களுக்கு பற்றாக்குறை இருந்து வருவதாக காரணம் தெரிவிக்கப்படுகிறது. (இ-30)

## சந்தைக் கட்டட புனரமைப்புக்காக
# கடைகளை இடம் மாற்ற பிரதேச சபை அறிவுறுத்து

ஊர்காவற்றுறை,ஒக்.17

ஊர்காவற்றுறை நவீன சந்தை கட்டட புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக அக்கட்டடத்தில் இயங்கும கடைகளை வேறு இடத்துக்கு மாற்றுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையினால அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி கட்டடத்தில் கடைகளை வைத்திருப்போர் தமக்கு தற்காலிகமாக வேறு இடங்களை ஒதுக்கித்தரக்கோரி கடைகளை அப்புறப்படுத்த மறுத்து வருகின்றனர்.

இதனால் குறிக்கப்பட்ட காலத்தில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கின் மீள் குடியேற்ற, புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகாரசபையினால் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 35 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

# ஆடுகளைத் திருடியதாக இருவர் கைதாகிப் பிணையில்

நெல்லியடி,ஒக்.17

வீடு ஒன்றில் கட்டப்பட்டிருந்த, 7,500 ரூபா பெறுமதியான மூன்று ஆடுகளைத திருடியதாகக் கூறப்படும் இருவரை, 3 ஆயிரம காசுப்பிணையிலும் 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் செல்லுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார்.

இம்மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற இந்த திருட்டுச்சம்பவம் தொடர்பாக ஆடுகளின் உரிமையாளரான கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி தங்கராசா (வயது 40) நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடி பொலீஸாரால் இதே இடத்தைச்சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (வயது40) முருகன் கிட்டினன் (வயது60) ஆகிய இருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து கடந்த புதன்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அப்பொழுதே முதலாவது சந்தேக நபரை ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 5 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும், இரண்டாவது சந்தேக நபரை 2 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 5 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்லுமாறு நீதிவான உத்தரவிட்டார்.

இந்த வழக்கு சம்பந்தமான அடையாளம் காணலும் தீர்ப்பும் அடுத்த மாதம் 24 ஆம் திகதி நீதிமன்றில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-109)

### குளோரின் விநியோகம் இன்னும் இல்லை

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.17

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் குளோரின் விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

வருடாவருடம மழைகாலங்களில் கிணற்றில் கலப்பதற்காக இப்பகுதிகளுக்கு "குளோரின்" வழங்கப்பட்டு வந்தது. இம்முறை குளோரின் இதுவரை வழங்கப்படாததால் மக்களுக்கு தொற்றுநோய் ஏற்படக்கூடிய ஆபத்து உருவாகியுள்ளது. (இ-133)

# வேலைத்திட்டங்களுக்கு நிதி

ஊர்காவற்றுறை,ஒக்.17

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வடக்கு - கிழக்கு மீள் குடியேற்ற, புனரமைப்பு புனர்வாழ்வு அதிகார சபையினால் பின்வரும் வே லைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார்.

★ ஊர்காவற்றுறை உணவுக் களஞ்சியம் புனரமைப்பதற்கு 20 லட்சம் ரூபா.

★ ஊர்காவற்றுறை நவீன சந்தைக்கட்டட புனரமைப்புக்கு 35 லட்சம் ரூபா.

★ ஊர்காவற்றுறையில் சுற்றுலா விடுதி அமைப்பதற்கு 30 லட்சம் ரூபா.

மேற்படி வேலைத்திட்டங்களை மிக விரைவாக ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-ரி)

### ஆஸ்பத்திரியில் நாய்கள தொல்லை

வடமராட்சி,ஒக்.17

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வளவிலும், ஆஸ்பத்திரி வீதியிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

நோயாளர்களும், பாதசாரிகளும் கட்டாக்காலி நாய்களின் தொல்லையினால் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர். (இ-173)

# வல்வெட்டித்துறை மருத்துவமனையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

நெல்லியடி,ஒக்.17

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகின்றது.

இங்கு இரு பதிவு வைத்திய அதிகாரிகளும், ஒரு வைத்திய அதிகாரியும் பணிபுரிந்து வருகின்றனர்.


வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பல நோயாளிகளும் இவ்வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வருவதாகவும், தினமும் வெளிநோயாளர் பிரிவில் 500க்கு மேற்பட்டவர்களுக்கு தாம் சிகிச்சையளிப்பதாகவும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் தெரிவித்தார். (இ-109)

### கோவாவில் அழுகல்நோய்

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.17

புன்னாலைக்கட்டுவன், ஈவினை பிரதேசங்களில் விவசாயிகளினால் நடுகை செய்யப்பட்ட கோவா மற்றும் மரக்கறிப் பயிர்களில் தொடர்ச்சியான மழை காரணமாக அழுகல் நோய் ஏற்பட்டுள்ளது. (இ-133)

# 31ஆம் நாள் கண்ணீர் சொரிந்தளிக்கும் நினைவஞ்சலி







அமரர்

**யோசப் சாமுவேல் அப்புத்துரை**

மண்ணில் 13.01.1922 — விண்ணில் 13.09.2000

**திருமதி அப்புத்துரை அரசமணி**

மண்ணில் 05.03.1931 — விண்ணில் 17.09.2000

*'உயிர்ப்பும், உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'*

நெஞ்சம் துடிக்க நினைவெல்லாம் நீராகத்
தஞ்சம் வேறின்றித் தவிக்கின்றோம் - விழித்துயர்
கொண்டோம் அரசமணிக்கோ தாய் - உமையிழந்து
மாண்டோய்ந் தழுகின்றோம் நாம்.

இன்று (17.10.2000) செவ்வாய் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:-
*6, கடுக்காயடி லேன்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

தற்காலிக முகவரி:-
*கற்கேணியடி,*
*நவாலி வடக்கு,மானிப்பாய்.*

(79526)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## தம்பிமுத்து சோமசுந்தரம்

மலர்வு 01-04-1942

உதிர்வு 29-10-1999

ஈராறு மாதங்கள் இருண்டு ஆண்டொன்று
ஆனாலும் உங்கள் நினைவு அகலாது
எங்கள் இதயமெனும் வீணையில் என்றென்றும்
இசைத்துக் கொண்டே இருப்பீர்கள்.

தங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (79552)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை கெங்காகுலரட்ணம்

சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கெங்காகுலரட்ணம் (15 - 10 – 2000) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் அம்பிகாபதியின் அன்புக் கணவரும் றாதா, றஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகன், சற்குணநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சி. சறோஜினிதேவி

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (79547)

### அந்தோனிப்பிள்ளை எட்வேட் பிறின்ஸ்

(இளைப்பாறிய உதவி முகாமையாளர்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்)

இல. 23, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்வேட் பிறின்ஸ் அவர்கள் 15-10-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை – மேரிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற திருமதி மரியம்மா பிறின்ஸ் (இளைப்பாறிய ஆசிரியை, கன்னியர்மடம் ம.வி.) அவர்களின் அன்புக் கணவனும், எடித் அன்டியா (பிரான்ஸ்), டெலிஸியன் (லண்டன்), வின்ஸ்லோஸ் (பிரான்ஸ்), எடித் மெலானி (ஆசிரியை, புனித றோக் வித்தியாலயம்), எடித் நிலானி, எல்மோ உலோஷங்ரன் (பிரான்ஸ்), எடித் சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பிறின்ஸ்லி பயஸ் (பிரான்ஸ்), சியாமலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், றொபின் (பிரான்ஸ்), பிரவீன் (பிரான்ஸ்), யூடிபத் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், சிசிலியா ஜோன், காலஞ்சென்றவர்களான இரத்தினம் ஜேம்ஸ், விஜியன் (சில்லாலை) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை – திரேசம்மா (நெடுந்தீவு) ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கபபடும்.

தகவல்:
பிள்ளைகள்.

இல. 23. சுவாட்ஸ் ஒழுங்கை,
சுண்டிக்குளி. (79557)

## உதை பந்தாட்டம்

வலி. வடக்கு, ஒக். 17

வலிகாமம் கல்வி வலயக் கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

★ இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

★ ★ ★

யாழ்ப்பாணம் கல்வி வலய கோப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8. 30 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள போட்டிகள் வருமாறு:

**18 வயதுப் பிரிவு**

★ அச்சுவேலி மகாவித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கலலூரி.

★ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி.

★ ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

★ உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் இடைக்காடு மகாவித்தியாலயம்.

(இ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் கல்வி வலய நல்லூர் கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளினடயேயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்றுசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

கால் இறுதி ஆட்டத்தில்

★ யாழ். இந்துக்கல்லூரி எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி.

★ யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம் எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ். இந்துக் கல்லூரி. (இ-86)

## ஞாயிறன்றும் கடை திறப்பு

தென்மராட்சி, ஒக். 17

தீபாவளியையொட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு நெல்லியடி வணிகர் மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

( இ - 117 )

## உண்டியல் பணம் திருட்டு

மானிப்பாய், ஒக். 17

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் உண்டியல் பெட்டிகளில் இருந்து பணம் திருடப்பட்டுள்ளது. கடந்த வியாழன் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த ஆலயத்தில் அடிக்கடி உண்டியல் பெட்டிகளில் இருந்து பணம் திருடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

( இ — 20 )

## இதய அஞ்சலி

யாழ். மத்திய கல்லூரி ஆளணியைச் சேர்ந்த
இளைப்பாறிய

**T. பூபாலசிங்கம்** காலமானார்.

அமரரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி.
(79560)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(கணபதிப்பிள்ளை வாத்தியார்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று 16 – 10 - 2000 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் உருக்குமணியின் அன்புக் கணவரும், குபேந்திரபதி, திருமதி ஜெயமணி பத்மநாதன், கமலேந்திரன், ஞானேந்திரன், கருணேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான கமலாவதி, பத்மநாதன் (T.P) மற்றும் அன்னலட்சுமி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்திரலக்சுமி, முரளி, பிரேமிளா, பிரேமானந், பத்மஜெயந், தாரணி, நிஷானி, சுபேந்திரா ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன், திருநேர்த்திரவல்லி, திருநாவுக்கரசு மற்றும் அன்னலட்சுமி, சாரதாம்பாள் ஆகியோரின் அன்பு மைதுனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (16-10-2000) நடைபெற்றதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. கமலேந்திரன்.
(மகன்)

''சிவபதி''
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு. (79542)

### திருமதி அரியநாயகம் தையல்நாகேஸ்வரி

(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

வட்டு. பிளவத்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியநாயகம் தையல்நாகேஸ்வரி நேற்று (16—10—2000) காலமானார்.

அன்னார் கனகசபை அரியநாயகம் (சாமி)—(யாழ். ப. நோ. கூ. சங்க பதிப்பகம்) அவர்களின் அன்புமனைவியும் சுவேந்தன் (கொக்குவில், தொழில்நுட்பக் கல்லூரி), கோசலா, கல்யாணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (17—10—2000) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. அரியநாயகம் (கணவன்)

191, காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்) (79556)

### பிரான்சிஸ் சவரிமுத்து

(கட்டட நிர்மாணிப்பாளர்)

குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் சவரிமுத்து அவர்கள் 2000-10-14 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ்—அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் செனோபியம்மாவின் அன்புக் கணவரும், ஞானப்பிரகாசம்—வரோனிக்கம்மாவின் மருமகனும் மரியம்மா, இராசம்மா (கனடா), காலஞ்சென்ற ஹென்றி மத்தியாஸ் (கொழும்பு), இராஜேஸ்வரி, துரைசிங்கம் (நீர்கொழும்பு), குருசுமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஸ்ரெலா (பிரான்ஸ்), ஸ்ரனிஸ்லோஸ் (கொழும்பு), ஸ்ரீபன், ஸ்ரான்லி (ஜேர்மனி), ஸ்ராலின் (கொழும்பு), ஸ்ரொக்சன் காலஞ்சென்ற ஸ்ரொடிஷியன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பிரான்சிஸ் சேவியர் (ஆசிரியர்), காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், காலஞ்சென்ற தம்பித்துரை, விக்ரோ ஆகியோரின் மைத்துனரும், இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), உஷா, அலோமா, கலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், பெர்னாமரின், கிறிஸ்ரீன், குளோடியா, தனுஷிபா, சாளினி, தயாளினி, மாலினி, வலன்ரைன், அலன்ரைன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் நாளை (2000-10-18) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து புனித சவேரியார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரொக்சன்

குளமங்கால்,
மல்லாகம். (79555)

உதயன்

## முதலீட்டாளரின் அவநம்பிக்கை

தேர்தலுக்குப் பின்னர் கொழும்புப் பங்குச் சந்தை கிடுகிடுவெனச் சரிந்து வருவதாகப் பொருளியலாளர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். தேர்தல் நடைபெறுவதற்கு முந்திய வாரத்தில் 525.4 ஆக உயர்ந்திருந்த பங்குச் சந்தைப் புள்ளி கடந்த வெள்ளிக்கிழமை 509 ஆக வீழ்ந்தது.

முதலீடு செய்வோர் மத்தியில் தோன்றி உள்ள அவநம்பிக்கையையே இந்தச் சரிவு பிரதிபலிக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை நிலவியதாலேயே தேர்தலுக்கு முன்னர் பங்குச் சந்தைப் புள்ளி ஒரே பாய்ச்சலாக உயர்ந்திருந்ததாக பொருளியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போரின் மத்தியிலும் பொருளாதாரத்துறையில் நாடு முன்னோக்கிச் செல்வதாக ஜனாதிபதியும் முந்திய அரசின் அமைச்சர்களும் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் நடைபெற்ற மாநாடுகளிலும் பிரலாபித்து வந்தனர். அது உண்மையெனில் முதலீட்டாளர்களிடம் பொ. ஐ. மு. அரசு குறித்து அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கக் காரணமில்லையே!

போர் நிறுத்தம் குறித்து ஒரு வரியும் எழுதப்படாத, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஐந்து வரிகள் மட்டுமே கொண்ட ஒரு பந்தி அடங்கிய, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்கள், வெற்றிகள் குறித்தே விலாவாரியாக எழுதப்பட்டிருந்தது. அவற்றைப் படித்த பின்னரும் முதலீட்டாளர் அக்கட்சி அரசு மீது நம்பிக்கை வைக்கவில்லை என்றால் அர்த்தம் என்ன? நிச்சயமாக செயலளவில் உண்டான அனுபவமாகவே இருக்கும்!

இல்லையெனில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரத் திட்டங்கள் தமக்கு நன்மை அளிக்கும், சாதகமாக இருக்கும் என்று முதலீட்டாளர்கள் கருதி இருக்க வேண்டும்.

எந்தக் கட்சி ஆட்சியில் அமர்ந்தாலும், எக்கட்சியின் பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்கள் எத்துணை சிறப்பாக இருப்பினும், போர் நிறுத்தப்படாதவரை அதற்காகச் செலவிடப்படும் பணம் கோடிக்கணக்காக பல அடுக்குகளுக்கு உயர்ந்து செல்லும் வரை, இந்த நாட்டின் பொருளாதாரம் கீழே சரிந்து கொண்டேயிருக்கும்.

போரை நியாயப்படுத்தும் விதத்தில், பொருளாதாரம் குன்றவில்லை, போரால் பொருளாதாரத்துக்குப் பாதிப்பில்லை என்று அரசியல்வாதிகள் சப்புக் கொட்டினாலும் போர் நாட்டின் சகல வகையான வளங்களையும் தீர்த்துக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை; யதார்த்தம். எந்த நவீன வகையான பொருளாதாரத் திட்டத்தினாலும் அதனைத் தடுக்க முடியாது.

ஆகையால், நாட்டின் பொருளாதாரத்தில் அக்கறை உள்ள அரசு எந்தக் கட்சியினுடையதாயினும், போரை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுப்பது இன்றியமையாததாகும். அவ்வழிநாடிச் செயற்படுவது மிக அவசியம். பொருளாதாரத்துறை மேம்பட்ட நிலையில் இல்லாவிடில் அந்த நாட்டில் வளர்ச்சி, முன்னேற்றம் என்பன வெறும் சொல்லளவிலேயே இருக்கும்.

இதனைக் கருதியாவது புதிய அரசாங்கம் போரை நிறுத்தி அதன் மூலகாரணியான இனப்பிரச்சினைக்கு, நீதியான தீர்வு காண்பதற்கு மனங்கொள்ள வேண்டும்-

# கிழக்கில் தமிழர் பிரதிநிதித்துவம்

# பறிபோனமைக்குக் காரணம் என்ன?

மட்டக்களப்பிலிருந்து உதயன் செய்தியாளர்
இரா. துரைரத்தினம்

இலங்கையின் 11ஆவது நாடாளுமன்றத் தேர்தல்கள் நாடு முழுவதும் அதிஉச்ச வன்முறைகள் மோசடிகளுடன் நடந்து முடிந்திருக்கின்றன. இத்தேர்தல் தமிழர்களுக்கும் பல படிப்பினைகளையும் உணர்த்தியிருக்கிறது. ஸ்ரீ லங்கா நாடாளுமன்றத்துக்கு நடைபெறும் தேர்தலால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என எதிர்பார்க்க முடியாது என்ற யதார்த்த நிலையை ஏற்றுக்கொள்கின்ற போதிலும் தமிழ் மக்கள் முற்றாக இத்தேர்தலை நிராகரிப்பது எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

இந்தத் தேர்தலில் கிழக்கு மாகாணத்திலிருந்து எட்டு முஸ்லிம்களும் நான்கு சிங்களவர்களும் நான்கு தமிழர்களும் தெரிவாகியிருக்கிறார்கள். பொது மக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து எட்டுப் பேரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நான்கு பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து இருவரும் சுயேச்சைக் குழு, தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவற்றிலிருந்து தலா ஒவ்வொருவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

### திருமலையில்

தமிழர் தாயகத்தின் தலைநகர் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் தான் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். ஆனால் அங்கு ஒரு தமிழ் பிரதிநிதியைக்கூட தெரிவு செய்யமுடியாமல் வக்கற்று நிற்கும் பரிதாபநிலையைப் பார்த்து அழுவதா? அல்லது சிரிப்பதா? என்று தெரியவில்லை. இந்த இழிநிலைக்கு மக்களை மட்டும் குறை சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாத தமிழ்க் கட்சிகள், பேரினவாதக் கட்சிகளுக்குத் துணை போவார்கள் என அனைவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் 364 சதவீத தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். சிங்களவர்கள் 33 6 சதவீதமும் முஸ்லிம்கள் 29 சதவீதமும் உள்ளனர்.

இந்தத் தேர்தலில் 3 முஸ்லிம்களும் ஒரு சிங்களவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழர்கள் எவரும் தெரிவாகவில்லை. 79 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் வாக்காளர்களால் ஒரு பிரதிநிதியைக்கூட தெரிவு செய்ய முடியாமல் போன அதேவேளை 65ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட முஸ்லிம்கள் மூன்று பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்கிறார்கள். 59 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட சிங்களவர்கள் ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்திருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலில் நான்கு தமிழ்க்கட்சிகள், தமிழ் வேட்பாளர்களைக் கொண்ட மூன்று சுயேச்சைக் குழுக்கள் என தமிழர் தரப்பிலிருந்து ஏழு அணிகள் போட்டியிட்டன. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளிலும் தமிழர்கள் போட்டியிட்டார்கள். 54 தமிழ் வேட்பாளர்களும் தமிழ் வாக்குகளைப் பிரித்ததால் தமிழர் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டு விட்டது.

அத்துடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 9ஆயிரம் தமிழர்களை அவர்கள் வாக்களிப்பதற்கு அனுமதிக்காததாலும் இந்த நிலைஏற்படுவதற்கு காரணம் என கூறப்படுகிறது. தமிழர்களின் கணிசமான வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் அளிக்கப்பட்டதால் அந்தக் கட்சிகளிலிருந்து முஸ்லிம்களும் சிங்களவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் தமிழர்களின் இதயபூமி எனக் கருதப்படும் திருகோணமலையை சிங்கள, முஸ்லிம் மயப்படுத்துவதற்கு இத்தேர்தல் முடிவுகள் மேலும் வாய்ப்பாக அமைந்திருக்கின்றன.

இயற்கைத் துறைமுகம், கடல்வளம், நிலவளம் என செல்வச்செழிப்புடன் தனித் தமிழ் மாநிலமாகத் திகழ்ந்த திருகோணமலை மீது சுதந்திரத்துக்கு பின்னர் வந்த சிங்கள அரசுகள் கண் வைத்தன. கந்தளாய் நீர்ப்பாசன குடியேற்றத் திட்டம், துறைமுக குடியேற்றத்திட்டம் என சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1948 இல் 2 சத வீதத்துக்கு குறைவாக இருந்த சிங்களவர்களின் எண்ணிக்கை இப்போது 33.6 சதவீதமாக உயர்ந்திருக்கின்றது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் சேருவில தொகுதியும் உருவாக்கப்பட்டது. இப்போது தமிழர்களின் பிரதிநிதித்துவம் முற்றாக இல்லாமல் போயிருப்பது திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்துக்கு மேலும் வாய்ப்பாக அமைந்திருக்கின்றது.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அபிவிருத்திக் குழுவும், மாவட்ட இணைப்புக் குழுவும்தான் மாவட்டத்தின் குடியேற்றம் பிரதேச செயலாளர் பிரிவுகளை விஸ்தரிப்பது, அபிவிருத்தி ஆகிய அனைத்து விடயங்களையும் கையாள்கிறது திருமலை மாவட்ட அபிவிருத்தி குழு, இணைப்புக் குழு ஆகியவற்றில் தமிழர் ஒருவர் கூட இல்லாமல் போனமை தமிழர்களுக்கு எதிரான முடிவுகளை எடுப்பதற்கு சாதகமாக அமைந்திருக்கின்றது. எதிர்காலத்தில் தமிழர்கள் அங்கு கால்வைப்பதற்கு கூட இடமில்லாமல் போனாலும் ஆச்சரியப்படுவதற்குஇல்லை.

தமிழர் தாயகத்தின் தலைநகர் அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் முற்றுமுழுதான சிங்கள மயமாக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவ்வாறான பேரபாயங்களுக்கு தமிழர்களிடையே இருக்கும் ஒற்றுமையீனம் தான் முதற் காரணம்ஆகும்.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 76 சத வீதம் உள்ள தமிழர்களால் இரு பிரதி நிதிகளை மட்டுமே தெரிவு செய்ய முடிந்திருக்கின்றது. 23 சத வீதத்துக்கும் குறைவான முஸ்லிம்கள் 2 பிரதி நிதிகளைப் பெற்றிருக்கிறார்கள். இம் மாவட்டத்திலும் தமிழர்கள் பல அணிகளாக பிரிந்து போட்டியிட்டதாலும் தமிழர்கள் பேரினவாத கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியகட்சிகளுக்கு பெரும் எண்ணிக்கையான தமிழர்கள். வாக்களித்ததாலும்தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோயிருக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து நிமலன் சௌந்தரநாயகம், ஜோசப் பரராசசிங்கம் ஆகியோரும் தேசிய ஐக்கிய முன்னணியிலிருந்து முகைதீன் அப்துல் காதர். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அலிசாகிர் மௌலானா, பொது மக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து சோ. கணேசமூர்த்தி ஆகியோரும் தெரிவாகியுள்ளனர். தேசிய ஐக்கிய முன்னணியை சேர்ந்த ஹிஸ்புல்லா, தமிழர் விடுதலைக்கூட்டணியைச்சேர்ந்த செல்வராசா ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.

யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 54,448 வாக்குகளே கிடைத்தன. இம் மாவட்டத்தில் 2 லட்சத்து 10 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் உள்ளனர்.

தேசிய ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் தமிழர் நலன்களுக்கு எதிரான கட்சிகளுக்கு 70 ஆயிரம் தமிழர்கள் வாக்களித்திருக்கிறார்கள். இதில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் வாக்காளர்களும் அடங்குவர்.

யுத்தத்தைத் தொடர்ந்து தீவிரமாக நடத்துவோம், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அவரது சகாக்களையும் அழிப்போம். அதற்கு ஆதரவு தாருங்கள் எனக் கூறிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு, மட்டக்களப்பில் ஒரு நாடாளுமன்ற ஆசனம் கிடைத்திருக்கிறது அதுவும் நூறு சதவீதம் தமிழர்களின் வாக்குகளால் இந்தப் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி வாக்காளர்களும் கணிசமான வாக்குகளை அளித்திருக்கிறார்கள் என்பது தான் வெட்கப்பட வேண்டிய, வேதனைப்பட வேண்டிய விடயம்.

யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு இம்முறை ஓர் ஆசனம் கிடைத்ததைப் போன்று மட்டக்களப்பிலும் வரலாற்றில் முதல் தடவையாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து தமிழர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். நூறு சதவீதம் தமிழ் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

தமிழர்கள் மீது ஸ்ரீலங்கா அரசாங்கமும் அதன் படைகளும் நடத்தும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்து வந்த ஜோசப் பரராசசிங்கம் மிகக் குறைந்த வாக்குகளாலேயே வெற்றி பெற்றிருக்கிறார். 1994 இல் 49 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்ற ஜோசப் பரராசசிங்கத்துக்கு இம்முறை 12 ஆரயிம் விருப்புவாக்குகளே கிடைத்திருக்கின்றன. தமிழர்களை அடக்கி ஒடுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சியாக இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு மட்டக்களப்பில் 20 ஆயிரம் தமிழர்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

### அம்பாறையில்

அம்பாறை மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து பேரியல் அஷ்ரப், அதாவுல்லா, யு. எல். எம் முகைதீன், விமல் திசநாயக்கா ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பி. தயாரத்னா, சந்திரதாஸ, கலபதி ஆகியோரும் சுயேச்சைக் குழுவிலிருந்து குணசேகரம் சங்கரும் தெரிவாகியுள்ளனர்.

66 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றபோதிலும் 19 ஆயிரம் வாக்குகளை மட்டும் தமிழர் மகாசபை சார்பில் போட்டியிட்ட சுயேச்சைக்குழு பெற்றிருக்கிறது. அச்சுயேச்சைக்குழு ஒரு பிரதிநிதியைப் பெற்றிருக்கிறது. தெரிவுசெய்யப்பட்ட ஈ. பி. டி. பி. பிரதிநிதி தமிழர் நலன் சார்ந்தோ, அல்லது தமிழர் போராட்ட நலன்சார்ந்தோ, செயற்படுவார் என்று எதிர்பார்க்கமுடியாது. அவர்கள் தற்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சியாகியிருக்கிறார்கள்.

ஏழு பிரதிநிதிகளைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் 24 சதவீத தமிழர்களால் ஒரு பிரதிநிதியை மட்டுமே தெரிவுசெய்ய முடிந்திருக்கிறது முஸ்லிம்களுக்கு மூன்று பிரதிநிதிகளும் சிங்களவர்களுக்கு இருபிரதிநிதிகளும் கிடைத்திருக்கின்றனர்.

இத் தேர்தல் முடிவுகள் உணர்த்தி நிற்பது இதுதான். பேரினவாதக் கட்சிகளும் அவர்களின் பங்காளிக் கட்சிகளும் கிள்ளித்தெளிக்கும் வெறும் சலுகைகளுக்கும் சிறு வேலைவாய்ப்புகளை என்பனவே தமக்குக் கிடைத்தற்கரிய பெறுபேறுகள் எனப் பின்னால் செல்வதற்குத் தமிழர்களில் ஒருசாரார் தலைப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் சரியான அரசியல் நெறிப்படுத்தல் இன்றி விடுதலைப் போராட்டப் பாதையிலிருந்து விலகிச் செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தவில்லை என்றால் தமிழர்களை ஆண்டவனால் கூட காப்பாற்றமுடியாது ★

---

### உதய வாக்கு

தரத்தை மூடி வைப்பதை விடக் கடினம்; தரமின்மையை மூடி வைப்பது.

— கொல்ஸின்

---

## நாளை

ஐப்பசி 2
புதன் கிழமை
திதி: பஞ்சமி
முற்பகல் 8-23 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
மாலை: 6. 15 வரை.
சுபநேரம்: 4.32 — 6.02
ராகுகாலம்: 12.02—1.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

## சமய சந்நிதியில்

வடமராட்சி, ஒக். 17

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலில் எதிர் வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட அபிஷேகம் இடம்பெறும்.

( இ — 173 )

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (புதிய) **YAMAHA** (600w) எஞ்சின் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு. சதானந்தன், 5/1,புகையிரதவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (79535)

வாடகைக்கு விடும் 200 பைப கதிரைகள் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: இலக்கம் 101/1, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (79530)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1963 ஆம் ஆண்டு பிறந்த, உயரம் 5'4" உடைய, செவ்வாய்க் குற்றமற்ற, கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற, அழகிய, படித்த, உயர்குணம்மிக்க மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. திருமணம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று உடன் கூட்டிச் செல்லப்படுவார். தொடர்புகளுக்கு: விளம்பர இல.1117, C/o உதயன். (79507)

### தென்னங்கன்றுகள்

திறம் செவ்விளநீர் தென்னங் கன்றுகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவானந்தம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), வரியப்புலம்,சுன்னாகம். (79439)

### தபாலக ஆவணங்கள் மீட்பு

தென்மராட்சி, ஒக்.17

சாவகச்சேரி அஞ்சல் அலுவலக ஆவணங்களும் தளபாடங்களும் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டன.

இப்பகுதிக்குள் உத்தியோகத்தர்கள் செல்ல அனுமதிக்கப்படாத போதிலும படையினா இவற்றினை மீட்டு வந்து தபால் அதிபரிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)

### கொடிதினம்

யாழ்ப்பாணம், ஒக்.17

மக்கள் நலன்புரிச் சங்கத்தால் வருடாவருடம் நடத்தப்படும் கொடி தினம் இந்த வருடம் எதிர்வரும 20ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 20ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

### பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகம் நடத்தும் மாணவர்களுக்கான பொது அறிவு நுண்ணறிவுத் தேடலுக்கான பரீட்சை-3 இன் விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிகமாக வினாத்தாள்கள் தேவைப்படும் பாடசாலைகள் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (இ-ரி)

### முன்மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகம் நடத்தும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தர மாணவர்களுக்கான முன்மாதிரிப் பரீட்சைகள் எதிர்வரும 27ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

இப் பரீட்சைக்குரிய விண்ணப்பத்தினையும் கட்டணத்தினையும் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்பாக தத்தமது பாடசாலையினூடாக சங்கப் பிரதிநிதியிடம் ஒப்படைக்குமாறு அல்லது "அருணன்ஸ் எம்போட்ஸ் எக்ஸ்போட்" கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு செயற்திட்ட இயக்குநர் கேட்டுள்ளார். (இ-ரி)

### கட்டடத் திறப்பு விழா

கொழும்புத்துறை, ஒக்.17

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் மாடிக் கட்டடத் திறப்புவிழா அதிபர் நா. சண்முகசுந்தரம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பரிபாலன சபையின் தலைவி சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, 'செஞ்சொற் செல்வர்' ஆறு-திருமுருகன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினார்கள். (இ-30)

## 29 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி கனகசபாபதி தவஜோதி

கடந்த 19-09-2000 அன்று சிவபதம் அடைந்த எனது அன்பு மனைவியின் 31 ஆம் நாள் கிரியைகள் எமது இல்லத்தில் 19-10-2000 வியாழக்கிழமை நடைபெறும். எனது மனைவியின் மறைவு அறிந்து ஓடோடி வந்து எனக்கு ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்கள் பல. இவர்களில் பலர் தங்கள் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்திருப்பதனால் அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. எனது இல்லம் நாடி எனக்கு ஆறுதல் கூறி, துயரில் பங்கு கொண்ட அனைவரையும 19-10-2000 இல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பெ. கனகசபாபதி**
கணவர்

*சிவகாமி அம்மன் கோயிலடி,*
*இணுவில்.* (79538)

## 45 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



### செல்வி நுதர்சினி நடராசா (தர்சா)

(தொண்டர் ஆசிரியை – யாழ். கைதடி குருசாமி வித்தியாலயம் – கைதடி வடக்கு, கைதடி)

| மலர்வு | அகால உதிர்வு |
|---|---|
| 26-07-1977 | 04-09-2000 |

நீர் எம்மை விட்டுப் பிரிந்து 45 நாள்கள் மட்டும்தான்
இருந்தும் நீர் எங்கள் உள்ளங்களில் என்றும் நீங்காது
நிறைந்திருக்கின்றீர்
என்ற நினைவுகளுடன் உமது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்ப விளக்கு *செல்வி நுதர்சினி நடராசா (தர்சா)* அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து இறுதிக் கிரியைகளில் நேரடியாகப் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அச்சுவேலி அரசினர் வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் யாழ்.கைதடி குருசாமி வித்தியாலயம், யாழ். கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர்கள், ஆசிரியர்கள், பா.அ. சங்கத்தினர், அன்னாருடன் உயர்கல்வி பயின்ற ஆருயிர் நண்பிகள், இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களுக்கும், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோருக்கும், யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளித்த, வைத்திய கலாநிதிகள் மற்றும் தாதியருக்கும் சிரந்தாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

நாளை (18-10-2000) புதன்கிழமை கந்தரோடை தமிழ்க் கந்தையா உபாத்தியார் வீதியிலுள்ள "இலக்குமி வாசா" இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு.திருமதி சி. நடராசா**
(பெற்றோர்)
**ந. பிரதீபன்** (பிரான்ஸ்)
**ந. பார்த்தீபன்**
(சகோதரர்கள்)
**குடும்பத்தினர்**

தற்காலிக முகவரி:
*"இலக்குமி வாசா"*
*தமிழ்க் கந்தையா உபாத்தியார் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.*

நிரந்தர முகவரி:
*கைதடி வடக்கு, கைதடி.* (79486)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வாலாம்பிகை சோமசுந்தரம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1919-06-15 | 1999-10-29 |

திதி 17-10-2000

அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை அவர்
அடி தொழ மறப்பவர் மனிதரில்லை மண்ணில் மனிதரில்லை!
ஆண்டொன்று போனதம்மா ஆனாலும் என்றும்
எங்கள் இதயத்துள் உங்கள் நினைவுகள் தூங்காதம்மா!

**திருமதி ப. தவராஜா (தயா)**
**மகள் மற்றும்**
**குடும்பத்தினர்.**

*2/2, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண்வீதி,*
*யாழ்ப்பாணம்.* (79525)

## 31 ஆம் நாள் நீங்கா நினைவும் நன்றி நவிலலும்



### திருமதி சிவலிங்கம் கண்ணம்மா

| அன்னையின் மடியில் | ஆண்டவன் திருவடியில் |
|---|---|
| 07-11-1917 | 17-09-2000 |

அன்பின் ஒளிவிளக்காய்
பாசத்தின் திருவுடிவாய்
நேசத்தின் உறைவிடமாய்
என்றென்றும் எம்மனைவரையும்
ஆதரித்தீர்கள். இன்று நாம்
விழிநீர் சொரிந்து நிற்க
இறைவன் உங்களை ஆதரித்தார்.
ஆண்டுகள் பல சென்றாலும் என்றும்
எங்கள் நீங்கா நினைவில்
நிலைத்திருப்பீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

17-09-2000 இறைவனடி சேர்ந்த எங்கள் பாசத் தெய்வத்தின் மரணச செய்தி கேட்டு பல வழிகளிலும் எமக்கு உதவி, எமது துன்பத்தில் கலந்து கொண்ட அயலவர்கள்,உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.**

தற்காலிக முகவரி:
*சந்தை கிழக்கு ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (79532)

நிரந்தர முகவரி:
*இல. 674, கண்டிவீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

# பிலிப்பைன்ஸ் அதிபர் மீது ஊழல் குற்றச் சாட்டுகள்!

## விசாரணைக்கு நாடாளுமன்றம் அனுமதி!!

மணிலா, ஒக். 17

பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசப் எஸ்ரடோக்கு பெரும் தொகைப்பணத்தை லஞ்சமாகப் பெற்றுக் கொடுத்ததாக மாகாண ஆளுநர் ஒருவர் சுமத்திய குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை நடத்த நாடாளுமன்றம் செனட்டுக்கு அனுமதி அளித்துள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகளிலும், தொழில்களிலும் ஈடுபட்டு வருபவர்களிடமிருந்து 21 மாதகால இடைவெளியில் சுமார் 86 லட்சம் ரூபாவை அதிபர் ஜோசப் எஸ்ரடோவுக்குப் பெற்றுக் கொடுத்ததாகவும் —

அதிபரின் அறிவுறுத்தலின் படியே இது செயற்படுத்தப்பட்டதாகவும் மாகாண ஆளுநர் லூயி சிம்சன் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

சட்டவிரோதச் சூதாட்ட விடுதி ஒன்றின் உரிமையாளர் ஒருவரிடமிருந்து பெரும் தொகைப் பணத்தை எஸ்ரடோ தனது முன்னிலையில் பெற்றதாகவும் சிம்சன் மேலும் தெரிவித்திருந்தார்.

இது குறித்து ஆலோசனை நடத்திய நாடாளுமன்றக் குழு எஸ்ரடோ மீதான குற்றசாட்டுக்கள் குறித்து விசாரிக்க நாடாளுமன்ற செனட்டுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

எஸ்ரடோ மீதான விசாரணைகளைத் தாமதப்படுத்த எதிர்க்கட்சிகள் ஒப்புக் கொண்டுள்ள நிலையில் விசாரணை நடத்தப்படுமா என்று பிலிப்பைன்ஸ் மக்களிடையே சந்தேகம் எழுந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-8)

## ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஈராக் அதிபருடன் பேச்சு!

பாக்தாத், ஒக். 17

ஈரான் மற்றும் ஈராக் இடையேயான உறவுகளைச் சீர்படுத்தும் முயற்சியாக ஈரான் வெளியுறவு அமைச்சர் கமால் குரோசி ஈராக் சென்றுள்ளார்.

எண்பதுகளில் இருநாடுகளிடையே ஏற்பட்ட பத்தாண்டு யுத்தத்தின் பின்னர் அவற்றிடையேயான உறவுகள் சீர்கெட்டிருந்ததுடன் யுத்தக் கைதிகள் தொடர்பான பிரச்சினை உட்பட பல சிக்கல்கள் தீர்க்கப்படாமல் இருந்தன.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுடன் ஈரானியவெளி விவகார அமைச்சர் பேச்சு நடத்தியபோது இருநாடுகளிடையேயான தீர்க்கப்படாத சிக்கல்கள் குறித்து தீவிர ஆலோசனை நடத்தியதாகவும் —

பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர ஈராக் சகல வழிகளிலும் உதவியளிக்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும் —

செய்தியாளர்களிடம்பேசும் போது கமால் குரோசி தெரிவித்தார். (ஒ-8)

## துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந்த்

நேற்றையஉதயனில் 10ஆம் பக்கத்தில் வெளியான செய்தி ஒன்றில் இந்தியத் துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந்த் என்பதற்குப் பதிலாக ஜனாதிபதி ஸ்ரீகாந் என்று தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டு விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

[ஆ-ர்]

## மலேசியப் பிரதமர் தலைமையில் மரம் நடுவதில் சாதனை முயற்சி

கோலாலம்பூர், ஒக். 17

மலேசியப் பிரதமர் மகதிர் மொகமட் தலைமையில் மரம் நடுவதில் உலகசாதனை புரியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1997ஆம்ஆண்டுமுதல்இந்த உலகசாதனை முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் — அந்த ஆண்டில் மட்டும் 30 லட்சம் மரங்கள் நடப்பட்டதாகவும் —

தற்போது நாடளாவிய ரீதியில் ஒரு நிமிடத்தில் ஒரு லட்சம் மரங்களை நடும் முயற்சி நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் —

பிரதமர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு இறுதிக்குள் மலேசியாவில் 2 கோடி மரங்கள் நடப்பட்டு உலக சாதனை நிலைநாட்டப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

பிரேசிலில் 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் ஒரு வார காலத்துக்குள் 24199 மரங்கள் நடப்பட்டது இதுவரை உலக சாதனையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ 8)

## கிருஷ்ணசாமி முறைப்பாடு

சென்னை, ஒக் 17

தமிழ் நாட்டில் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெறுவதாக புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி, தமிழக முதல்வர் மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார் (ஒ)

## வியட்நாமில் அடை மழைக்கு 400 பேர் பலி

கோசிமின்சிற்றி, ஒக். 17

வியட்நாமில் மழையினால் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப் பெருக்குக்கு 400 - க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

நாட்டின் மத்திய, தெற்குப் பகுதிகளில் வெள்ளத்தினால் பல இடங்களில் உருவான சேற்றுச் சகதியில் பலர் சிக்கி உயிரிழந்ததாகவும் — தொடர்ந்து அடைமழை பெய்து வருவதால் உயிர்மற்றும் உடைமைச் சேதங்கள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (ஒ)

## பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு!

நியூயோர்க். ஒக். 17

பாகிஸ்தானில் மனித உரிமைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அதிகரித்துள்ளதாக மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இயங்கிவரும் ஹியூமன் ரைட்ஸ் வோட்ச் என்ற மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்—

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர் அரசியல் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பரவலாக முறைகேடுகளில் ஈடுபடுவதாகவும்—

இராணுவ அரசின் அதிபர் பர்வேஷ்முஷாரப் மனித உரிமைகளைத் திட்டமிட்டுச் சிதைத்து வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# அயோத்திப் பிரச்சினை குறித்து ஆர்.எஸ்.எஸ். கடும் எச்சரிக்கை!

புதுடில்லி, ஒக். 17

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்டுவதை எதிர்க்கும் எந்த அரசும், அதன் விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று ஆர். எஸ். எஸ். எனப்படும் ராஷ்டிரீய சுயசேவா சங் என்ற இந்துதத்துவ அமைப்பின் மாநாட்டில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆக்ராவில் நடைபெறும் ஆர். எஸ். எஸ்ஸின் 3 நாள் மாநாட்டின் முதல் நாள் தொடக்க உரையாற்றிய மாநாட்டு அமைப்பாளரும் அவ்வமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான சுரேஷ்ராவ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:-

ராமர் பிறந்த இடத்தில் மிகப் பெரிய ஆலயம் கட்டப்படுவதை மக்கள் விரும்புகின்றனர் என்றும் —

இதனை எதிர்க்கும் எந்த அரசும் தேர்தல்களில் மக்களின் கோபத்தை எதிர்கொள்ள நேரிடும் என்றும் கூறினார்.

அரசின் ஆதரவு இல்லாமல் ஆலயம் கட்டுவது சாத்தியம் இல்லை என்று ஒப்புக் கொண்ட சுரேஷ்ராவ் மக்களை ராமர் ஆலயம் கட்டுவதற்கு ஆதரவாகத் திரட்டுவதே ஆர். எஸ் எஸ்ஸின் முக்கிய பணியாகும் என்றும் கூறினார்.

(ஒ-8)

## ராஜ்குமார் குறித்த வதந்தியால் தென்மாநிலங்களில் பரபரப்பு!

சென்னை, ஒக். 17

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டு கடந்த 70 நாள்களுக்கும் மேலாக பணயம் வைக்கப்பட்டுள்ள கன்னட நடிகர் ராஜ்குமார் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் இரவு விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக செய்திகள் பரவியதை அடுத்து தமிழக கர்நாடக, மாநிலங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, 'நக்கீரன்' கோபால், பழ.நெடுமாறன் உள்ளிட்ட தூதுக்குழுவினர் வீரப்பனுடன் பேச்சு நடத்திவருவதாகவும் —

நடிகர் ராஜ்குமார் உள்ளிட்டோர் நேற்று வரை விடுவிக்கப்படவில்லை என்றும் தமிழகப் பொலிஸின் கூடுதல் தலைவர் அலெக்ஸாண்டர் நிலைமையை தெளிவுபடுத்தியுள்ளார்.

நக்கீரன் பத்திரிகை இணை ஆசிரியர் காமராஜ், தமிழர் தேசியக் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் பரந்தாமன் ஆகியோரும் அலெக்ஸாண்டரின் கருத்தை உறுதிப்படுத்தினார்கள் நடிகர்ராஜ்குமார் விடுதலையான பின்னர் கர்நாடகத் தமிழர்கள் மீது தாக்கு நடத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக ராஜ்குமார் விடுக்கப்படும் நிலையில் நிலைமையைக் கண்காணிக்க அதிகாரிகளால் வதந்திகள் பரப்பப்பட்டிருக்கலாம் என்று தமிழகச் செய்தியாளர்கள் கருதுவதாகக் கூறப்படுகிறது.

### அமெரிக்க அதிபரானால்

## இந்தியா மீதான தடைகளை நீக்குவதாக புஷ் வாக்குறுதி

டோக்கியோ, ஒக். 17

தேர்தலில் வெற்றி பெற்று அமெரிக்க அதிபரானால், அணுகுண்டு சோதனை நடத்தியதற்காக இந்தியா மீது அமெரிக்கா அமுல்படுத்திவரும் தடைகள் அனைத்தையும் நீக்குவதாக அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் ஜோர்ஜ் டபியூ புஷ் உறுதியளித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஜப்பான் சென்றுள்ள புஷ் அங்கு இந்தியப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையில் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

சர்வதேச அணு ஆயுதத் தடை ஒப்பந்தமான சி. டி. பி. டியில் கையெழுத்திடும் படி இந்தியாவை வற்புறுத்தப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

புஷ்சை எதிர்த்துப்போட்டியிடும் அல்கோர் அதிபரானால் இந்திய வம்சாவளியினர் ஒருவரை அமைச்சராக்கப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

அமெரிக்காவில் குடியுரிமை பெற்று வாழும் கணிசமான எண்ணிக்கையிலான இந்தியர்கள் பொருளாதாரத்திலும், சமூக நிலைமையிலும் மேம்பட்டு இருப்பதால், அவர்களது ஆதரவைப் பெற அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் முயற்சித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

## பட்டினியற்ற புத்தாயிரமாண்டு என்பது நனவாகக்கூடிய கனவு

### ஐ.நா. அமைப்பு தெரிவிப்பு

கியூபெக், ஒக். 17

பட்டினியற்ற புத்தாயிரமாண்டு என்பது எமது வாழ்நாளில் நனவாகக் கூடிய கனவு என்று உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று அனுஷ்டிக்கப்பட்ட உலக உணவு தினம் மற்றும் 1945 ஆம் ஆண்டு கனடாவின் கியூபெக் நகரில் உலக உணவு விவசாய ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட 55 ஆண்டு நிறைவு தினம் ஆகியவற்றை முன்னிட்டு பணிப்பாளர் நாயகம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க, ஆசியப் பிராந்திய நாடுகளிலேயே பட்டினியால் வாடுபவர்கள் அதிகளவில் இருப்பதாகத் தெரிவித்த அவர், பட்டினிக்கும்போஷாக்கின்மைக்கும் எதிரான போராட்டத்தில் பங்கு பற்றுமாறு உலகத் தலைவர்களுக்கும் அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

வறுமை, பட்டினி என்பவற்றை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், அவற்றை தோல்வியுறச் செய்ய வேண்டியது நமது கடமை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

[ஒ-8]

## மரணச் சடங்கின் போது மின்னல் தாக்கி 6 பேர் பலி!

திருவனந்தபுரம், ஒக் 17

இந்தியாவின் கேரள மாநிலம் பாலக்காடு அருகே ஸ்ரீகிருஷ்ணா என்ற நகரில் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களை மின்னல்தாக்கியதில் 6பேர் கருகி உயிரிழந்தனர். 15 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் மிக் ரகப் போர் [illegible] ஒன்று விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த [illegible] ஸ்குவாரன் லீடர் மோகன்குமார் என்பவரின் [illegible] மயானத்தில் பலத்த மழைக்கு நடுவே [illegible] றுக்கொண்டிருந்தபோது அப்பகுதியில் பலர் இறுதிச் சடங்கை நடத்திக்கொண்டிருந்துள்ளனர்.

மோகன்குமார் கொல்லப்பட்ட விமானம் தரையில் ஒரு வீட்டின் [illegible] துப் பெண் ஒருவர் உயிரிழந்ததுமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

# திருமலையை கோட்டை விட்டதற்கு தமிழ் வாக்காளர்களும் பொறுப்பு

## தமிழ்காங்கிரஸ் அமைப்பாளர் கூறுகிறார்

திருகோணமலை, ஒக். 17

திருகோணமலையிலிருந்து தமிழ் எம்.பிக்கள் எவரும் தெரிவு செய்யப்படாததுக்கு அங்குள்ள தமிழ் வாக்காளர்களும் பொறுப்பு.

மேற்கண்டவாறு தமிழ்க் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் வி. இராஜக்கோன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோனதற்கு வேட்பாளர்கள் தான் காரணம் என்று கூற முடியாது. வாக்காளர்கள் நினைத்திருந்தால் உண்மையான, நேர்மையான, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கக் கூடியவர்கள் யாரென்று தீர்மானித்து வாக்களித்திருக்கலாம்.

வாக்காளர்களில் 55 சதவீதமானோர் வாக்களிக்காமல் விட்ட தவறு தான் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பறிபோனதற்குக் காரணம் என்று துணிந்து சொல்லலாம்.

தமிழர் மகாசபை திருகோணமலையில் போட்டியிட முன்வந்த கட்சிகளை ஒற்றுமைப்படுத்த முயற்சித்த போது தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை பூரண ஒத்துழைப்பை வழங்கின. தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றே ஒற்றுமை முயற்சிக்கு முன்வரவில்லை. ஒற்றுமை முயற்சி பலனளித்திருந்தால் எமது பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட்டிருக்கும்.

கடந்த 42 வருடகால இடைவெளிக்குப் பின்னர் திருமலையில் போட்டியிட்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் விசுவாசமான வாக்குகள். மாமனிதர் குமார் உயிருடனிருந்த போது கிடைக்காத வெற்றி அவர் இறந்ததன் பின்னர் தலைவர் அ. விநாயகமூர்த்திக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ்த் தேசிய இனம் இன்னும் உண்மையான அரசியல் பாதையை உணரவில்லை என்றே தோன்றுகிறது. திருகோணமலையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்த் தேசிய இனத்திற்காக தனது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

## சிறுவர் நூல் நிலையம்

கொழும்புத்துறை, ஒக. 17

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் சிறுவர்களுக்கான நூல் நிலையம் ஒன்று பாடசாலைக் கட்டடத்தில் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (இ-30)

## கல்வி நிலையப் பரிசளிப்பு விழா

நெல்லியடி, ஒக். 17

புலோலி கல்வி நிலையப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு ஆசிரியர் ஆ. கந்தையா தலைமையில் நடைபெறும்.

பதினொராம் தர மாணவர்களின் அனுசரணையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் கல்வி நிலைய இயக்குநர் ஆசிரியர் என். சிவலிங்கமும் மற்றும் பல ஆசிரியர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

(இ-109)

## நூலகத்தில் ஊழியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஒக் 17

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் நீண்ட காலமாக ஊழியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான நூல்களை வழங்கிவரும் இந்த நூலகத்தில் 10 நூலக உதவியாளர்கள், 2 உதவி நூலகர்கள் மற்றும் ஒரு சிற்றூழியர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் இது வரை நிரப்பப்படாமல் உள்ளன.

இது சம்பந்தமாக உரியவர்களிடம் பல தடவைகள் தாம் விண்ணப்பித்த போதும் இது வரை எவரையும் நியமனம் செய்யவில்லை எனவும் இதனால் நூலக சேவைகளைத் திருப்திகரமாக வழங்குவதற்குத் தாம் மிகவும் சிரமப்படுவதாகவும் நூலகர் தெரிவித்தார். (இ 10-1)


### தென்னைச் செய்கையாளர் கவனத்திற்கு

அதிகூடிய விளைச்சலைத் தரக்கூடிய இன செவ்விளநீர் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. குறைந்த கைபிருப்பே இருப்பதனால் தேவையானோர் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

திரு. ஜெ. சத்தியேந்திரன்,
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
20, றக்கா லேன், சுண்டுக்குளி. (79537)

### முகாமையாளர் தேவை

எமது வியாபார ஸ்தாபனத்துக்கு முகாமையாளர் தேவை. அனுபவமும், திறமையுடன் கணக்கியல் துறையில் அனுபவம் உள்ளவர்கள் அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

டில்க்கா பேணிச்சர் பலஸ்
இல. 441, K. K. S. வீதி,
( சிவன் கோயில் அருகில் )
யாழ்ப்பாணம்.

(79529)

### வாழ்த்துகின்றோம்

★◀▶◀▶◀▶◀▶◀▶◀▶★

யா| சங்குவேலி அ. த. க. பாடசாலை
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2000
கு. பிரசன்னா - 154 புள்ளி

ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்
திரு. திருமதி வ. குமாரதாசன்.

(சி/13405)

### வாழ்த்துகின்றோம்

எங்கள் சங்கத்தின் நீண்டகாலத் தலைவரும் எங்கள் சங்கத்தை மாவட்டத்தில் முதன்மைச் சங்கமாக வளர்த்து உள்நாட்டு அதிகாரிகளினதும் வெளிநாட்டு ஸ்தாபனங்களினதும் பாராட்டைப் பெற்றுத் தந்தவருமான மதிப்புக்குரிய

திரு. சி. சிவமகாராசா

அவர்கள் பெரும்பான்மை விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமை எங்களைப் பெரு மகிழ்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

திரு சி. சிவமகாராசா அவர்கள் நீண்ட ஆயுள் பெற்று எமது பகுதிக்கும் நாட்டுக்கும் நற்சேவை செய்து புகழ் பெற மனமார வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர் சபை,
ஊழியர்கள், அங்கத்தவர்கள்.
வலி. வடக்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ. து) தெல்லிப்பழை.

(79527)

### செய்முறைப் பரீட்சை

தென்மராட்சி, ஒக். 17

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விவசாய பாட செய்முறைப்பரீட்சை நாளை புதன்கிழமை யாழ்க்கருவி நாயகர் வித்தியாலயத்தில் நடைபெறுமென வித்தியாலய அதிபர் கு. சிவானந்தம் அறிவித்துள்ளார். (இ—117)

### உடன் விற்பனைக்கு

6 KW. மின்சார இயந்திரம், லீஸ்ரர் மற்றும் ஐஸ்கிறீம் தயாரிக்கும் கொம்பிறசர் பாத்துடன் உடன் விற்பனைக்கு உண்டு.

காலை 10 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

ப. விக்கினராசா (ராசா)
No 23, கேசாவில் பிள்ளையார் கோயில் றோட்,
வண்ணார்பண்ணை.

(79533)

### கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் வீ. பி. செல்வநாதன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி யோகம்மா பரமநாதன்

அவர்களது மறைவையிட்டு அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காணி மாவட்ட பதிவக நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி/13416)

### கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் இரண்டாம் வருட தமிழ்நெறி ஆசிரிய மாணவன்
தி. சசிதரனின் அன்புத் தாயார்

திருமதி தில்லையம்பலம் இரஞ்சிதமலர்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தமிழ் நெறி இரண்டாம் வருடம்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

(79548)

### கண்ணீர் அஞ்சலி

வட்டு.மத்திய கல்லூரியின் நீண்ட காலத்தலைவரும் பவள விழாச் சபைத் தலைவருமான

திரு. ந. சபாரத்தின சிங்கி அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

செல்லத்துரை நடராஜா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவர்களின் குடும்பத்தின் துன்பத்தில் பங்கு கொண்டு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
வட்டு மத்திய கல்லூரி.

(7954·)

### யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது

வரையுள்ளது

அச்சக தொழில்நுட்ப மேற்பார்வையாளர்

இச் சங்க அச்சகத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒரு தொழில்நுட்ப மேற்பார்வையாளர் (FOREMAN) தேவையாக உள்ளது, அனுபவம், ஆற்றல், வேலைகளை கவனித்து நெறிப்படுத்தக் கூடிய தகுதியுடையோர் 27.10.2000 ஆம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு முன் சுய விவரம் அடங்கிய விண்ணப்பத்தை பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பிக்கலாம்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்,
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்.

16.10.2000 (சி/13415)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2000

யா/முத்துத்தம்பி ம.வி. மாணவி

**செல்வி அருணாசலம் கவிசனா**

142 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்துள்ளமையையிட்டு மாணவியையும் அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(79545)

---

யா/வட்டு.திருநாவுக்கரசு வித்தியாலய மாணவர்களைப்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய

| | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|
| செல்வி சற்குணராசா பாமினி | 169 | 38 |
| செல்வன் சதானந்தன் பிரதாபன | 145 | |

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அ.அரியரத்தினம்
வட்டு. சிவன் கடன்வழங்கு கூட்டுறவு சங்கத்தார். வட்டுக்கோட்டை.

(79543)

---

## அறிவித்தல்

கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு என்ற இடத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட

**வைரமுத்து முருகேசு, கிருஷ்ணவேணி முருகேசு**

தம்பதிகளின் மகள்

**செல்வி சுசீலா**

எமது ஆச்சிரமத்தில் 1993ஆம் ஆண்டு தொடக்கம் வதிகிறார்.

இவரின் தந்தை இறந்துவிட்டார்.தாயார் 1995ஆம் ஆண்டு வன்னி சென்ற பின் எதுவித தொடர்புமில்லை.அவரின் கணவரின் ஊரான அம்பாள் குளம், கிளிநொச்சியில் வதியக்கூடும்.

இப்பிள்ளையின் எதிர்காலம் பற்றி அவரின் தாயாருடன் கலந்துரையாட விரும்புகின்றோம் தாயார், அன்றி பிள்ளையின் பாதுகாவலர் திருமதி க.இரத்தினேஸ்வரி, கெருடாவில் தெற்கு,

எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மேற்குறிப்பிட்டவர்களோ அன்றி இப்பிள்ளையின் நெருங்கிய உறவினர்களோ 30-10-2000க்கு முன் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவருடன் தொடர்புகொள்ளும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம், வதிரி,கரவெட்டி.
தலைவர், தர்மகர்த்தாக்கள் சபை.

(79550)

---

## தவறிவிட்டது

சாவகச்சேரியிலிருந்து அண்மையில் இடம்பெயர்ந்து மானிப்பாய் தற்காலிக முகவரியில் வசிக்கும் **செல்வி சுசீலா அருளானந்தம்** (சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்) என்பவர் 16.10.2000 அன்று தமது புதிய **கைக்கடிகாரத்தினை (Gold Chain)** மானிப்பாயிலிருந்து யாழ்.பல்கலைக்கழகம் வரும் வழியில் தவறவிட்டுள்ளார்.

இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கலைப் பீடாதிபதி அலுவலகம், யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு மிகவும் விநயமாக வேண்டுகிறேன்.

தகவல்:
சுசீலா அருளானந்தம்

(79562)

---


## பொருளியல்

★ 2002 ★ பகுதி II

ஆரம்பம் :- 14.10.2000 வியா. 4 மணி

**2001 PAPER CLASS**

ஆரம்பம்: 19.10.2000 வியா 5 மணி

R.இராஜேஸ்வரன்

பிரத்தியேக வகுப்பு

TEMPLE ROAD, NALLUR

(கைலாசபிள்ளையார் கோயிலடி)

(79546)


---

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன்

**செல்வன் அரியநாயகம் சுவேந்தன்**

அவர்களின் அன்புத்தாயார்

திருமதி

**அரியநாயகம் தையல்நாகேஸ்வரி**

அவர்கள் காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

சக மாணவர்கள் (E.E - III)
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி.

(79564)

---

## ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றத்துக்காக விண்ணப்பங்களை யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை கோரியுள்ளார்.

இந்த இடமாற்றங்கள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்காக இடமாற்றச்சபை அடுத்த மாதம் 23ஆம் திகதி தமது அலுவலகத்தில் கூடவிருப்பதாகவும் -

அதற்கு முன்னோடியாக இடமாற்றம் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் - அவர் வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார். (இ-3)

## புதிய கற்கை நெறிகள்

யாழ்.உயர்தர தொழில் நுட்ப நிறுவனத்தில் புதிய ஆண்டுக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உயர்தேசிய டிப்ளோமா (கணக்கியல்), தேசிய டிப்ளோமா (ஆங்கிலம்), உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் வியாபார கற்கையிலான தேசிய டிப்ளோமா, வியாபாரமும் நிதியியலுமான தேசிய டிப்ளோமா, ஆங்கில டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளே இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி அடுத்த மாதம் 7ஆம் திகதி ஆகும். (இ-7)

## மரம் விழுந்து மின் விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.ஆஸ்பத்திரியில் 24ஆம் இலக்க வார்ட்டுக்கு முன்பாக நின்ற மரம் ஒன்று 24ஆம் இலக்க வார்ட்டுக்கான மின் விநியோக வயர்களின் மேல் வீழ்ந்ததில் நேற்றிரவு 24ஆம் இலக்க வார்ட்டின் ஒரு பகுதிக்கும், தாதிகள் பயிற்சிக் கல்லூரிக்கும் மின் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருந்தது. (இ-8)

## செய்முறைப் பரீட்சை நேரசூசி

யாழ்ப்பாணம்,ஒக்.17

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை ஆகியவற்றின் ஜி.சீ.ஈ. (சாதாரண தர) வகுப்பு மாணவர்கள் நாளை புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் 12மணிவரை மருதனார்மடத்தில் உள்ள கல்வி வலயத்தில் தங்களது செய்முறைப் பரீட்சைக்குரிய நேரசூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

சங்கீதம், மனையியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுக்கான நேரசூசியைகளே வழங்கப்படவுள்ளதால் ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ-10-ரி)

## அதிபர்கள் கூட்டம்

வலி.கிழக்கு,ஒக்.17

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான மாதாந்த கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்திற்கு சகல அதிபர்களையும் தவறாது சமுகம் தருமாறு கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் கேட்டுள்ளார். (இ-180)

---


## SHAMROCK

**A/L 2001 & 2002**

*Hindu* - Mr.நிதி (B.A)

*CHRIS* - Mrs A.மல்லிகா B.A

★ கலைப்பிரிவு நடைபெறுகின்றது

★ O/L & Gr.10 PAPER

★ Gr.7 முதல் 11 வரை

★ Spoken English

(C/13413)


---

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

**அமரர் பேராசிரியர் அ.துரைராஜா** அவர்களினதும்

முன்னாள் பதிவாளர் **அமரர் வே.ந.சிவராஜா** அவர்களினதும்

## *67 ஆவது பிறந்த தின நினைவுப் பேருரைகள்*

10.11.2000 வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் 1009 நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. பி.ப 3.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நினைவுப் பேருரைகள் இடம்பெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

1) வாழ்த்துரை :- **திரு.க.கனகரத்தினம்**
*(பதில் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம்)*

2) தலைமையுரை :- **பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)*

3) நினைவுப் பேருரைகள்:-

*பேராசிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரை*
**பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி)**
*(முன்னாள் மருத்துவ பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)*

*திரு.வே.ந.சிவராசா நினைவுப் பேருரை*
**பேராசிரியர் சு.பவானி**
*(சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

4) நன்றியுரை:- **கலாநிதி சி.சிவலிங்கராஜா**
*(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

பி.ப 4.30 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்: ச.க.நனோந்திரன்* *விழா அமைப்புக் குழு*

(79540)

---

## சாவகச்சேரி இந்துக்கல்லூரி

### 6ஆம் தரத்திற்கான அனுமதி

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், இணுவில் மத்திய கல்லூரியிலும் இயங்குகின்ற மேற்படி கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 11.11.2000**

(C/13423) - அதிபர்.

---

# மரண அறிவித்தல்கள்

## கிறகோரி பாவிலுப்பிள்ளை (தலைவர்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்தவருமான கிறகோரி பாவிலுப்பிள்ளை அவர்கள் நேற்று (16.10.2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறகோரி - கிறகாள் ஆகியோரின் அன்பு மகனும் நேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பிலிப்பு. தொம்மைப்பிள்ளை, கிறிஸ்தோ, சுவானி இராக்கினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மற்றும் பாவிலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் அருள்திரு. அல்றின் அவர்களின் ஞானத்தந்தையும் அருள்செல்வன் யூட் சுபின்ராஜின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(17.10.2000) செவ்வாய்க்கிழமை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
(C/13430)
தகவல்:
மத்தேசு பாவிலுப்பிள்ளை (மைத்துனர்)

## திருமதி நடராசசுந்தரம் தேவமலர்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி நடராஜசுந்தரம் தேவமலர் 14.10.2000 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் நடராசசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை சின்னமணி அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற ச.சிவக்கொழுந்து பூரணம் அவர்களின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு பொரளை கனத்தை மயானத்தில் இன்று (17.10.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆச்சாரிலேன், காளிகோயிலடி கோண்டாவில் மேற்கு,கோண்டாவில். (தாவடி)
தகவல்:
சி.நடராசசுந்தரம்(அப்பு) (கணவர்)
(79561)

## திருமதி மாணிக்கம் சிவக்கொழுந்து

யாழ்.கந்தர்மடத்தைச் சேர்ந்தவரும் தற்போது கொழும்பு - 6 ஐ வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி மாணிக்கம் சிவக்கொழுந்து நேற்று (16.10.2000) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்புச் சகோதரியும் தேவராசா(ஓய்வு பெற்ற கணக்காளர்), ராமலிங்கம்(கனடா), மகேஸ்வரி, சிவனேஸ்வரி, தனலட்சுமி(காணிப்பதிவாளர்), அரியநாயகம்(முகாமையாளர், கடற்றொழில் கூட்டுத்தாபனம்), நட்ணவடிவேல்(அவுஸ்திரேலியா), பாஸ்கரன்(கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலாதேவி, தவமலர், கந்தசாமி, சிவலிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம், லீலாவதி இரஞ்சினி, விமலாம்பாள் ஆகியோரின் மாமியாரும் முகுந்தன்(பொறியியலாளர்), வைகுந்தன்(விவசாயபீடம், மட்டக்களப்பு) யாசினி(லிகிதர் திருமலை), அரவிந்தன்(யாழ்.மருத்துவபீடம், பிரதீபன்(கனடா), மதிவதனி, வதனி, நகுலன், இரட்டைவதனி(பிரான்ஸ்), தேவகி,குலன், காலஞ்சென்ற சாந்திகுமார்,ரமேஸ்குமார், சங்கீதா, சர்மிளா(யாழ்.மருத்துவபீடம்), சியாமளா, (விவசாயபீடம், வயம்ப) இரஜீவன், இரஜீகா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை(19.10.2000) பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/3,கந்தபுராண வீதி, கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.
தகவல்:
திருமதி லீலா அரியநாயகம்(மருமகள்)
(C/13425)

## யாழ்.ஆஸ்பத்திரி மீது

# ஜெற் விமானங்கள் பறப்பது இனிமேல் தவிர்க்கப்படும்

## தளபதி விஜேந்திரா உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மேலாக சுப்பர்சோனிக் ஜெட் விமாணங்கள் பறந்து செல்வது இனிவரும் காலங்களில் தவிர்க்கப்படும்- என்று யாழ்.பாதுகாப்புப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உப தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே தளபதி இவ்வாறு உறுதியளித்திருக்கிறார்.

செப்ரெம்பர் முற்பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மேலாக விமானப்படையின் ஜெட் விமானங்கள் அடிக்கடி பறந்ததை ஆட்சேபித்து வீ.ஆனந்தசங்கரி தளபதிக்கு கடிதம் எழுதியிருந்தார். ஜெற் விமானங்கள் பறப்பதால் நோயாளருக்கும் ஏனைய மக்களுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு எழுதிய பதிலில் -

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மேலாக ஜெற் விமாணங்கள் பறந்ததால் பொதுமக்களுக்கு உண்டான அசௌகரியங்கள் குறித்து நான் மிகுந்த வருத்தம் அடைகிறேன். இனிமேல் இவ்வாறு நடைபெறாமல் இருப்பதற்கு இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன். பொதுமக்கள் அடைந்த கஷ்டங்கள் குறித்து நானும் பெரும் கவலையடைகிறேன். இராணுவ நடவடிக்கையின் போது தவிர்க்க முடியாத நிலையிலேயே அது நடைபெற்றது. என்று மேஜர் ஜெனரல் விஜேந்திரா தெரிவித்துள்ளார்.

(அ)

## கண்டியில் இதுவரை 75 பேர் கைது

கொழும்பு,ஒக்.17

தேர்தல் தினத்தன்று கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு அரசியல் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரை 75பேர் கைது செய்யப்பட்டு கண்டி போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடுகன்னாவ பொலீஸ் பிரிவைச் சேர்ந்த பிலிபத்தலாவ, பந்துர, கபரலியத்த பொலீஸ் பிரிவு ஆகிய இடங்களில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு , துப்பாக்கிப் பிரயோகம் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்களே கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-8)

### பேரியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது வீட்டில் வைத்து அவர் பதவிப்பிரமாணம் செய்வது தொடர்பாகவும் அந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

இருவருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் சுமுகமாக இருந்ததாகவும் -

எனினும் இரு தரப்புக்கும் இடையில் உடன்பாடு கைச்சாத்திடுவதில் தாமதம் நிலவுவதாகவும் - செய்தி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

### சிஹல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"வானமே இடிந்து வீழ்ந்தாலும் சிங்கள மக்களுக்குத் தலைமை வகிக்கும் கிறிஸ்தவனாக நான் இருக்க விரும்பினேன். ஆனால் என்னை ஒதுக்குவதற்காக கட்சியில் உள்ள பயங்கரவாதிகள் எனக்கு எதிராகச் செயற்பட்டனர். அதன் காரணமாக எனது பதவியைத் துறக்கிறேன்" என்று அவர் அந்தச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதே நேரம் - இந்தக் கட்சிக்கு தேசிய பட்டியல் மூலம் கிடைத்த எம்.பி. பதவிக்கு அந்தக் கட்சியின் செயலாளர் திலக் கருணரத்தின நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான தகவல் தேர்தல் ஆணையாளருக்கு நேற்று மாலை அனுப்பப்பட்டது. (இ-3)

### அமைச்சர்களுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்மியூனிஸ்ட் கட்சி, இவ்வருடத் தேர்தலுக்காக இணைந்த தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளிடையே அமைச்சர் பதவிகளை பகிர்ந்து கொள்வதில் கருத்து வேற்றுமைகள் நிலவியதாக அறிய வந்தது.

தினேஷ் குணவர்த்தனா தனக்கு விவசாய அமைச்சுப் பொறுப்பு தேவையென விடாப்பிடியாக நின்றதாக ஒரு தகவல் தெரிவித்தது. இந்த முக்கிய அமைச்சை இப்போது பொ.ஐ.முவின் செயலாளர் டி.எம்.ஜெயரத்னா வகித்து வருகிறார்.

இதேபோன்று மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு தமது கட்சிக்கு வழங்கப்படவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணி கேட்டுக்கொண்டது. இப்போது இந்தப் பதவியை அனுருத்த ரத்வத்த வகித்து வருகிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ராஜா கொலுரேக்கும் ஓர் அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது. இதேவேளை பாதுகாப்பு பிரதி அமைச்சர் பதவி அனேகமாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கே வழங்கப்படும் என ஊகம் தெரிவிக்கப்பட்டது.

றொனி டி மெல்லுக்கு பிரதி நிதி அமைச்சர் பதவியே வழங்கப்படும் என்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுப்பொறுப்பு அவருக்கே கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி போக்குவரத்து அமைச்சுப் பொறுப்பும் தனக்குத் தேவை எனக் கேட்டுக் கொண்டதாம்.

மேற்படி கட்சி அமைச்சர் பதவிகள் இரண்டு, பிரதி அமைச்சர் பதவிகள் மூன்று, ஆளுநர் பதவி, வெளிநாட்டுத் தூதுவர் பதவிகள், தேசியப் பட்டியல் எம்.பி. பதவிகள் என்று தமது கோரிக்கைகளைப் பெருக்கிக் கொண்டு போனதாகவும் தெரிய வருகிறது. இதனால் கோபமுற்ற சிரேஷ்ட அமைச்சர்கள் கலந்துரையாடலில் இருந்து சிலமணி நேரம் வெளிநடப்புச் செய்ததாகவும் அறிய வந்தது.

இதேவேளை ஈ.பி.டி.பிக்கு ஓர் அமைச்சர் பதவியும். ஒரு பிரதி அமைச்சர் பதவியும் வழங்க முடிவு எடுக்கப்பட்டதாம்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு வடக்குப் புனர்வாழ்வு, உத்தியோக மொழி அமுல், வடக்கு - கிழக்கு நிர்வாகம், கப்பல் போக்குவரத்து ஆகிய பொறுப்புகளை ஒப்படைக்கவும் -

அம்பாறை மாவடத்திலிருந்து தெரிவான குணசேகரன் சங்கரனுக்கு இந்து சமய விவகாரப் பிரதி அமைச்சர் பதவி வழங்கவும்- இணக்கம் காணப்பட்டதாகவும் அறியவந்தது.

அதே போன்று லக்ஸ்மன் கதிர்காமருக்கு வெளிநாட்டு அமைச்சர் பதவியும் ஆறுமுகம் தொண்டமானுக்கு கால்நடை அபிவிருத்தி தோட்டக் கட்டமைப்பு அமைச்சர் பதவியும் வழங்க முடிவாகியதாக தகவல்கள் தெரிவித்தன.

(அ-3)

### நோர்வேயின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியிருக்கும் என்பதைக் கதிர்காமர் ஏற்றுக்கொண்டதாக அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

சமாதான முயற்சி தொடர்பாக விடுதலைப்புலிகள் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் கதிர்காமர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

"விடுதலைப்புலிகளிடம் இருந்து நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் இதுவரை சாதகமான பதில் எதனையும் பெற்றுத்தரவில்லை. எனினும் அவரை வரவேற்க இலங்கை எப்போதுமே தயாராக இருக்கின்றது. சமாதான முயற்சிக்கு அனுசரணையாளராக அவர் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்" என்று கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், நோர்வேயின் சமாதான முயற்சி பழைய கதை. நோர்வேக்காரர்கள் விரும்பியதைச் செய்யட்டும். அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைக் கடுமையாக முன்னெடுத்துச் செல்லும்" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் தேர்தல் முடிந்த கையோடு நோர்வேயிடம் தமது அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்காகவே கதிர்காமர் நோர்வே சென்றுள்ளார் என்று அந்தப் பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.


**லாலாவின் அதிர்ஷ்டத்தில் நீங்கள்**

**ஒவ்வொருவரும் பங்குகொள்ளுங்கள்!**

லாலா நீலசோப், சன்சயின் சோப் இவற்றை உங்கள் ஆடைகளில் தேய்த்து சலவை செய்யும்போது நீங்களும் லாலாவின் அதிர்ஷடத் தெரிவில் ஒருவராக இருந்தால், சோப்பின் உள்பகுதியில் லாலா சோப் அடையாளம் பொறிக்கப்பட்ட ஒரு தகட்டைக் காணலாம். அதனை எடுத்து எமது லாலாசோப் வியாபாரிகளிடம் அல்லது வாகன வியாபாரிகளிடம் அல்லது லாலா சோப் தொழிற்சாலையில் கொடுத்து அதிர்ஷடப் பரிசான பெண்களுக்கான ஒரு குடையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**இன்றே கேட்டு வாங்குங்கள்....!**

**லாலா சோப்** அல்லது **சன்சயின் சோப்**

கேட்டு வாங்கி நீங்களும் அதிர்ஷடசாலியாகுங்கள்.

**லாலா சோப் தொழிற்சாலை**

அச்சுவேலி

(C/13427)



**துயர் பகிர்வு**

எமது நிறுவன ஊழியரான

**திரு. அன்ரன் ரவீந்திரா**

அவர்களின் அன்புத் தந்தையார்

**தர்மலிங்கம் அருளானந்தம்**

அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி, விரிவுரையாளர்கள்,
சக ஊழியர்கள்,
DCS, Jaffna.

(79536)



**இதய அஞ்சலி**

எமது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்

**திரு.பரமநாதன் லோகநாதன்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி யோகம்மா பரமநாதன்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்,

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*வேலணை.*

(C/13433)



**எமது புதிய வீடியோ CD வெளியீடு**

லிவிங்ஸ்டன், கௌசல்யா நடித்த
* நினைவெல்லாம் நீ
* பாரதி

**ஒறிஜினல் வீடியோ CD வெளியீடுகள்**

* மாயி * ஒப்பு
* வெற்றிக்கொடி கட்டு
* பார்த்தேன் ரசித்தேன்
* கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்
* சிம்மாசனம்
* அலைபாயுதே

Note:
எம்மிடம் வீடியோ CDக்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**நரேன் வீடியோ சென்ரர்**
140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C/13431)



**நூல் வெளியீட்டு விழா**

EASY APPROACH FOR
NATIONAL CERTIFICATE IN
COMPUTER APPLICATIONS
(PART - I)

பிரதம விருந்தினர்

பேராசிரியர் அ.சண்முகதாஸ் B.A.(Cey), Ph.d (Edinburg)
பீடாதிபதி, பட்டப்படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்

நூலாசிரியர்

**பாலசுந்தரம் ஜெயக்குமார்** B.Sc. (Com. Sc.)
Dip. in Tech (Com. Eng.), AMIMIS (London),
Dip. in Hardware Eng. (London), NCCA, Acp.
பகுதி நேர விரிவுரையாளர், (திறந்த பல்கலைக்கழகம்,
உயர்தொழில்நுட்ப நிறுவனம், IIS)

**இடம்: IIS, Millenium Hall**

**(100, Clock Tower Road, Jaffna)**

*காலம்: இன்று 17.10.2000 மாலை 2.30 மணி*

* இவ் வெளியீட்டு விழாவுக்கு ஆர்வமுள்ள அனைவரும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை வழங்குவோர்:-

திரு.தி.மகேஸ்வரன்
ஐ.தே.க. நாடாளுமன்ற
உறுப்பினர் (MP)
யாழ்.மாவட்டம்.

சி.சிவலிங்கம்
உரிமையாளர்,
தினேஸ் பேக்கரி,
மானிப்பாய்.

(C/13426)



**நூல் வெளியீடும் வாழ்த்தும்**

யாழ்.மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி இன்று (17.10.2000) வெளியிடப்படவுள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் முதல் கணனி நூலான

EASY APPROACH FOR NATIONAL CERTIFICATE IN COMPUTER APPLICATIONS (PART - I)

எனும் நூலின் ஆசிரியரும், எமது IIS நிறுவன விரிவுரையாளருமாகிய திரு.பா.ஜெயக்குமார் அவர்களின் உன்னத பணியினையும், அயராத உழைப்பினையும் கண்டு IIS சமூகம் பெருமிதம் அடைவதுடன், அவரது பணி தொடர மனமுவந்து வாழ்த்தி இறையாசியை வேண்டிநிற்கின்றோம்.

IIS, 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்,
விரிவுரையாளர்கள்,
ஊழியர்கள்.

(C/13429)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.